1

நெல்லி மர விருட்ச மகிமை

இந்த நெல்லி விருட்சத்தின் அடியில் தான் விஷ்ணு மூர்த்தி எழுந்தருளினார் என்றும் இந்த விருட்சத்தின் வாயிலாகத்தான் மகாலக்ஷ்மி தாயாரை ஆட்கொண்டார் எனவும் ஒரு புராணம் சொல்கிறது.

இந்த நெல்லி மரம் ஒவ்வொருவர் வீட்டிலும், தென்மேற்கு பகுதியில் வைத்து வழிபடுவது நல்லது. நகரங்களில் தோட்டமும் செடி வைக்க இடமும் இல்லாதவர்கள் ஒரு துளசிமாடத்தை வீட்டில் தென்மேற்கில் வைத்து அதில் துளசிச் செடியும், நெல்லிச் செடியும் வைத்து வழிபட்டு வர நல்ல செல்வம் கிடைத்து வறுமையே இல்லாமல் இருந்திடும்.

அந்த மாடத்தில் ஒரு நெய்தீபம் ஏற்றி விஷ்ணுவையும், மகாலக்ஷ்மியையும் வணங்கி மனமார தியானித்து அனுதினமும் தூப, நிவேத்தியம் செய்தும், முடிந்தால் புதன், வெள்ளிக்கிழமை விஷ்ணு சகஸ்ர நாமமும், லக்ஷ்மி சகஸ்ரநாமமும் சொல்லி வழிபடுவது நல்லது.

துளசி செடி விருட்சத்தின் மகிமை

1. இந்த துளசி செடி விருட்சம் தர்மத்வசன் எனும் மநு வம்சத்தரசன் தன் மனைவியான மாதவி, நூறு வருடம் கருக்கொண்டு ஒரு குமரியைப் பெற்றாளாம். அக்குழந்தை அழகில் ஒப்பில்லாதிருந்தால் (துள என்றால் ஒப்பு என்றும், சி என்றால் இல்லாதது) என்று பொருளடங்கி உள்ளது இந்த துளசி என்பதாகும்.

2. இவள் பதரிவனம் என்ற காடு சென்று நாராயணனே புருஷனாக வர எண்ணி பிரம்மனை நோக்கி தவஞ் செய்தாள். பிரம்மன் இவளுக்கு தரிசனம் தந்து என்ன வரம் வேண்டும்? என்று துளசியை கேட்க,

3. துளசியோ, நான் நாராயணனை கணவனாக அடைய விரும்புகிறேன் என்று பிரம்மனிடம் வரம் கேட்டாள். அதற்கு பிரம்மன் இவளை நோக்கி துளசியே கிருஷ்ணனின் தேகத்தில் பிறந்த சுதர்மன் எனும் கோபாலன் என்பவன் முன்னொரு காலத்தில் உன்னைக் கண்டு மோகித்து அவ்வாசையை நிறைவேற்ற முடியாமல் வருந்துகையில் இதனை அறிந்த ராதையோ அவனை பூமியில் பிறந்திட சபித்தாள். அவனோ, பூமியில் சங்கசூடன் என்று பிறக்கின்றான்.

4. நீ அந்த சங்கசூடனை மணந்து கொண்டு பின் விருட்ச ரூபமாய் பிருந்தாவனத்தில் பிருந்தாவனி எனும் பெயருடன் கிருஷ்ணனுடனிருப்பாய் என்று மறைந்தார். துளசியோ தன்னை நாடி வந்த சங்கசூடனை மணந்தாளாம். பின் இந்த சங்கசூடன் சங்கரருடன் யுத்தம் செய்து மாண்டு விடுகிறான் (இறந்து விடுகிறான்).

5. அதற்குப் பிறகு விஷ்ணு பகவானே சங்கசூடனை போல உருவம் மாறி துளசியை சேர்ந்து விடுகிறார். துளசியே தன் உணர்வின் கரண வேறுபாட்டால், இதனை உணர்ந்து என் கற்பை கெடுத்ததால் கல்லாவாய்! என்று சங்கசூடனாய் மாறி வந்த விஷ்ணுவை சபித்தாள்.

6. பின் விஷ்ணு பகவான் தமது பூர்வ ஜென்ம விஷயங்களை அவளுக்கு கூறி, இராதையும் நீயே துளசியும் நீயே என்று அவளை சமாதானப்படுத்தி நீ கண்டகி நதியுருவாயும், மற்றும் துளசி விருக்ஷமாயும், மணி மந்த்ர ஔஷத சக்தி பெற்று அனைவரும் பயன்படுத்தி உன்னை கொண்டாடப்படுவாய் என்றார்.

7. நானோ அதில் ஓர் மலையுரு ஆவேன் என்றார் விஷ்ணு. இத்துளசியோ மீண்டும் வைகுண்டமடைய அவளை சரஸ்வதி கோபித்தாள். அதனால் துளசி துளசிவனம்

என்ற இடத்திற்கு வந்தாள். விஷ்ணுபெருமான் துளசியை சந்தோஷப்படுத்தி மீண்டும் வைகுண்டத்திற்கு உடன் அழைத்துச் சென்றார். அந்த துளசிக்குரிய எட்டு நாமங்களை கார்த்திகை பௌர்ணமியில் பூசிப்பவர்கள், சகல சித்தியும் பெறுவர் என்றும் அருளினார்.

துளசியை வழிபட மாற்றம் தரும் அற்புதம்

8. இதுபோன்று துளசி செடி விருட்சத்திற்கு பலவித புராண சரித்திர கதைகள் உண்டு என்பதை உணர்ந்திடுக. ஆகையால் நெல்லி மர விருட்சத்திற்கு கூறியிருக்கும்படி துளசி மாடத்தையும் வழிபடுவது சகல சித்திகளுக்கும் வழிவகுக்குமாம்.

விருட்சமே, விமோசனம்.

தருப்பை விருட்ச மகிமை

1. இந்த அற்புதமான தருப்பை விருட்சம் பிரம்மனது மூக்கிற் பிறந்த பரபிரம்மத்தினிடத்தில் பிறந்தது. இதனை "ஓ! தர்ப்பையே சுபத்தை தருவதே எனது எல்லா பாவங்களும், போக்கிடுக!" என்று கூறி ஹும்பட் என்கின்ற மந்திரத்தை ஒருமுறை போதித்து மேலெடுக்க வேண்டும்.

2. இதில் பெண் தர்ப்பை அக்கிரஸ்தூலமும் மூலஸ்தூலமும் உடையது. மேலும் நபும்ஸக தர்ப்பை என்பது இவையே, இது அடி முதல் நுனி வரை ஒரே சமமான கனம் உள்ளதாம். இதைப்போல புருஷ (ஆண்) தர்ப்பையிலும், அதன் அடியில் பிரம்மனும், இடையில் விஷ்ணுவும், மேல் முனை நுனியில் சங்கரனும் ஆகிய திரிமூர்த்திகளும் வசிக்கின்றனராம்.

3. இந்த தருப்பை என்பது நாணல், யவைப்புல், அருகு, நெற்புல், விழல் என்றும் மற்ற புல்களை, மருள்பட்டை, சவட்டைக் கோரை, கோதுமை புல், இவைகளையும் சேர்த்து 10 விதமான தருப்பைகள் உள்ளன எனப்படுகிறது.

4. இப்படிப்பட்ட தருப்பையினை தேவதைகளாக எண்ணி மனிதர்களை கருத்தில் கொண்டு, பிதுர்க்களையும் எண்ணி இத்தருப்பையினை மடித்து அதன் நுனியாலும், தர்ப்பணஞ் செய்ய வேண்டும். இத்தருப்பையினை ஆதிவாரம் (ஞாயிற்றுக்கிழமை) பறித்து, அடுத்த ஞாயிற்றுகிழமை வரை உபயோகிக்க வேண்டும். அல்லது,

5. அமாவாசையில் பறித்தாலோ, பௌர்ணமிக்கு பறித்தாலோ ஒரு மாதம் வரையும் உபயோகிக்கலாம். சில மாதங்களில் பறித்தால் ஒரு வருடம் வரையும் உபயோகிக்கலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகிறது.

பறிக்கும் பொழுதும், அதை பிரார்த்தனை செய்து முடிவில் மையாக்கி வைக்கும் பொழுதும், பூஜிக்கும் பொழுதும், வும்பட் சுவாஹா என்று உச்சரிக்கவும்.

இந்த தருப்பையை வழிபட மாற்றம் தரும் அற்புதம்

வீட்டுப் பூஜை அறையில் எப்பொழுதும் மேற்குறிப்பிட்ட படி வாரமோ, மாதமோ, வருடமோ பறித்து வைத்து ஒரு முறை வழிபட்ட பழையதை சுத்தமான இடத்தில் வைத்துக் கொள்வது அல்லது சுட்டெரித்து விபூதியுடன் கலந்து நெற்றியிலும் வைத்துக் கொண்டு வரலாம். மாதவிலக்கை தவிர்த்து பெண்களும் நெற்றியில் பொட்டாக அணியலாம். இந்த தருப்பை எந்த தீய சக்தியும் வரவிடாமல் தடுத்து ஆட்கொண்டு தெய்வ பலத்தை தரவல்லதுதாம்.

அருகம்புல்லின் மகிமை

1. இந்த அருகம்புல் விருட்சமானதை விநாயகர் புராணத்தில் கூறியதாவது கவுண்டின்னிய மகரிஷி என்று ஒரு மகான் இருந்தார். அவர் அனுதினமும் அருகம்புல்லினால் விநாயகருக்கு பூசை செய்வது வழக்கம். அப்படி செய்யும் பூஜையை மனைவியிடம் சொல்லி விட்டு தான் பூசிப்பார். இப்படி பூசிக்கும் ஒரு நாள் அவரது மனைவி மிகவும் பதிபக்தி கொண்டவள்.

2. அப்படிப்பட்ட மனைவி மகரிஷியை நோக்கி நாதா மிதிலாபுரி அந்தணனான திரிசுரனை விட அளவற்ற அறுகுகளால் விநாயக பெருமானுக்கு நாம் அர்ச்சனை செய்து வருகிறோம். அப்படி இருந்தும் ஏன் நமக்கு மட்டும் நல்லபேறும், யோகமும் கிடைக்கவில்லை என்று கேட்டாள் ரிஷியின் பத்தினி.

3. இந்த மகா புருஷரான மகரிஷி கவுண்டின்யரின் சக்தியோ மிக மிக உயர்ந்தது. அதாவது நினைத்தவுட னேயே சகல செல்வதனதையும் அடையக் கூடியவர் என்பது அவர் மனைவி உணரவில்லை. இருந்தும் மனைவிக்கு அருகம்புல்லின் அருமை பெருமையான சக்தியையும் உணர்த்த வேண்டும் என்று எண்ணி மனைவியை பார்த்து உன்னிடம் நான் விநாயகருக்கு பூஜித்த ஒரு அருகம்புல்லை மட்டும் தருகிறேன்.

4. அதை நீ எடுத்துக் கொண்டு என் தபோசக்தியால் உன்னை இந்திரலோகம் அனுப்பி வைக்கிறேன். அங்கு இந்திரனிடம் நீ இந்த அருகை கொடுத்து அதன் எடைக்கு ஈடான பொன்னை (தங்கத்தை) மட்டும் தரும்படி கேட்டு வாங்கிக் கொண்டு வா என்று மனைவியை அனுப்பி வைத்தார். மனைவி அவ்வாறே, அந்த அருகம்புல்லை

மட்டும் எடுத்து சென்று தேவேந்திரனிடம் கொடுக்க அதை கண்ட தேவேந்திரன் அந்த அன்னையைப் பார்த்து என்னம்மா இது? இந்த தேவேந்திர பட்டினத்திற்கு இந்த சிறு அருகம்புல்லுடன் மனித வடிவமாகவே வந்து இருக்கிறீர்களே! என்று சிரித்துக் கொண்டே வணங்கியபடி கேட்டார் தேவேந்திரன்.

5. அந்த ரிஷிபத்தினி தான் வந்த செய்தியை சொன்னாள். இந்த அருகுக்கு சம எடை எனக்கு பொன் (தங்கம்) தாருங்கள்! என்றார். உடனே இந்திரன் தாயே நீங்கள் குபேரனின் அளகாபுரி பட்டினத்திற்குச் சென்று நீங்கள் கேட்டபடி இந்த அருகுக்கு சமமான பொன்னை தங்கத்தை குபேரனிடம் வாங்கிப் போகலாம் என்று அன்னைக்குத் துணையாக ஒரு நூறு தேவ தூதர்களை அனுப்பி வைத்தார் இந்திரன். குபேரபட்டினம் வந்த ரிஷிபத்தினியை கண்ட குபேரன் பக்தியுடன் வணங்கி பிறகு ரிஷிபத்தினியின் நோக்கத்தை அறிந்து குபேரன் புன்னகை கொண்டு அன்னையே! தங்க பொற்குவியலை மாமலை போல் இருப்பதை காட்டி இவற்றில் உங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு எடுத்துச் செல்லலாம் என்றார் குபேரன்.

6. அந்த ரிஷி பத்தினியோ "குபேரனே! நான் கொண்டு வந்திருக்கும் இந்த அருகின் எடைக்கு சமமான பொன்னை மட்டும் தான் வாங்கி வரும்படி என் கணவர் கூறியிருக்கிறார். அதனால் இந்த அருகை ஒரு தராசில் வைத்து அதற்குச் சமமான எடை பொன்னை தங்கத்தை மட்டும் தருவாயாக" என்றார் ரிஷிபத்தினி.

7. குபேரன் அதற்கு இசைந்து ஒரு தராசின் தட்டில் அந்த அருகை வைக்க மற்றொரு தட்டில் ஒரு மிக இம்மியளவு சிறிய பொன்னை வைத்தான் குபேரன். ஆச்சரியம் அந்த இம்மியளவு பொன் அருகம்புல்லுக்கு சமமாக வரவில்லை. இந்த விசித்திரத்தைக் கண்ட குபேரன், தன் வேலை

யாட்களை பார்த்து இந்த சிறிய அருகம்புல் மிகவும் சக்தி வாய்ந்ததாக தோன்றுகிறது.

8. இதன் பெருமையை யாராலும் அளவிட்டு கூற முடியாது போலும். இதற்கு இணையாக நம்மிடம் உள்ள பொக்கிஷம் அனைத்தையும், என்னையும் இருக்கின்ற அனைத்தையும் கொண்டு வந்து வைத்து சமபடுத்துங்கள்! பார்ப்போம் என்று குபேரன் வேலையாட்களுக்கு கட்டளையிட்டான்.

9. அதன்படி எல்லாவற்றையும் எடுத்து வந்து வைத்தாலும் அருகம்புல்லுக்கு சமமாக எதிர்தட்டு வரவில்லை. இந்த அற்புதத்தை கேள்விப்பட்ட தேவேந்திரன் அவனது நகரத்தில் உள்ள எல்லா பொன் பொருளையும் ஒன்று திரட்டி தராசில் வைத்தாலும் அருகம்புல்லுக்கு ஈடாக வரவில்லை. இந்திரன் தானும் ஏறி தராசில் நிற்க அப்பொழுதும் சமமாகவில்லை. உடனே இந்திரன் என்ன செய்வது என்று புரியாமல் மும்மூர்த்தியையும் அங்கு வருமாறு அழைத்தான்.

10. அழைத்தபடி மும்மூர்த்திகள் ஒன்றாக சேர்ந்து அங்கு வந்து அருகம்புல்லின் தட்டுக்கு எதிர்தட்டில் மூவரும் ஏறி நின்றார்கள். அப்பொழுதும் சமமாகவில்லை. சிறிது கூட அருகம்புல் தட்டுக்கு மேல் எதிர்தட்டு சமமாக எழும்பவில்லை. அப்படியே அசையாமல் இருந்தது.

11. அப்பொழுது தான் அனைவருக்கும் புரிகிறது. இந்த அருகம்புல் சாதாரணமானது அல்ல. இவை விநாயகப் பெருமானின் திருவடிகளில் அர்ச்சனை செய்து திருவடியின் மேன்மைகளை பெற்றிருக்கிறது என்று. மூவரும் தேவர்களும் அவர் அவர் ஞான திருஷ்டியில் தெரிந்து கொண்டு தராசு தட்டில் இருந்து அனைவரும் கீழ் இறங்கினர்.

12. பிறகு முப்பது முக்கோடி தேவர்களும் புடை சூழ்ந்து வரும்படியாகவும் அவரவர்களுடைய விமானத்திலேயே ரிஷி பத்தினியையும் ஏற்றிக் கொண்டு உடன் அழைத்துக் கொண்டு பூலோகத்தில் கவுண்டின்னிய மகரிஷியின் ஆஸ்ரமம் வந்து இறங்கினார்கள். இதனை கண்ட கவுண்டின்னிய மகரிஷி,

13. திடுக்கிட்டு திகைத்து அப்படியே நிலத்தில் விழுந்து வணங்கி இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பி ஆனந்த கண்ணீர் பொழிந்து பல முறை அவர்களை வலம் வந்து அவர்களை பார்த்து அடியார்க்கும் அடியனான அடியேன் விநாயகப் பெருமானுக்கு அர்ச்சனை செய்த அருகம்புல்லின் மகிமையையும் அருமை பெருமைகளையும் என் மனைவியும் மற்றவர்களும் உணர்ந்து அறிய வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்தேன் என்றார் கவுண்டின்ய மகரிஷி.

14. மூவரும், தேவர்களும், குபேரனும் ரிஷியை பார்த்து ஆதிபரம்பொருளாகிய விநாயகப் பெருமானின் திருவடியில் அர்ச்சிக்கப்பட்ட ஒரே ஒரு அருகம்புல்லுக்கு இந்த புவனம் முழுவதும் உள்ள சகல ஐஸ்வரியங்களும் ஈடாகவே ஆகாது. அப்படிப்பட்ட மகிமையான அருகம்புல்லைக் கொண்டு அனுதினமும் பூஜித்து வரும் உமக்கு ஈடான புண்ணிய புருஷர் வேறு யாருமில்லை என்று அனைவரும் ரிஷிக்கு வேண்டிய வரங்களை கொடுத்து மறைந்தனர்.

15. அன்று முதல் அம்முனிவருக்கு கற்பகத்தரு, காமதேனு, அட்சய பாத்திரம் போன்றவைகள் அனைத்தும் அந்த ரிஷிக்கும் அவர் பத்தினிக்கும் அவைகள் பணிவிடை செய்து வருகின்றன. இதனைக் கண்ட ரிஷி பத்தினி தான் கேட்ட கேள்வி தவறு என்று உணர்ந்து கவுண்டின்னிய

மகரிஷியின் பாதத்தில் விழுந்து வணங்கி மன்னிக்கும்படி கூறி அவருடன் சேர்ந்து விநாயகப் பெருமானுக்கு தானும் அனுதினமும் அருகம்புல்லால் அர்ச்சனை செய்து வந்தார்களாம் இருவரும்.

அருகம்புல்லினை வழிபட மாற்றம் தரும் அற்புதம்

16. இந்த அருகம்புல்லை அனுதினமும் பறித்து வினாயகர் திருவடிகளில் வைத்து தங்களுக்கு தெரிந்த விநாயகப் பாட்டுகள், மந்திரங்கள் சொல்லி வழிபட்டால் என்ன மகிமைகள் கிடைக்கும் என்று இந்தக் கதை உணர்த்தும் என்று நம்புகிறேன்.

கொன்றை மர விருட்சத்தின் மகிமை

1. ஒரு வித்தியாசமான மகிமை இந்த விருட்சத்திற்கு உண்டு. அதாவது ஓங்காரம் என்பது சகல ஐஸ்வர்யங்களையும் தரக்கூடியது. ஐஸ்வர்யம் என்பது வெறும் பொன், பொருள் மட்டுமில்லை. ஒரு ஜீவன், இறைநிலையிலேயே தோன்றி, வளர்ந்து அதனுள்ளேயே ஐக்கியமாவதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், திரவியங் களையும் பல யோக மார்க்கங்களையும் பெறுவதும், ஐஸ்வர்ய கடாட்சமாகும்.

2. இந்த வகையில் ஓங்காரப் பிரணவ மூர்த்தியானவர் தன்னைப் பரப்பிரம்மத்தின் சொரூபமாக உணர்த்த வேண்டி, தவம் புரிவதற்கான புனிதமான ஸ்தலத்தை தேடி வருகையில்தான் ஸ்ரீமகாலட்சுமி அன்னையின் கருணை கடாட்சம் நிறைந்ததும், சகல ஐஸ்வர்யங்களும் பொருந்திய ஸ்தலமான திருப்பத்தூரை வந்தடைந்தார்.

3. இவ்விடத்தில் தான் ஓங்கார பிரணவ மூர்த்தி பெரும் தவம் பூண்டு தன்னை வழிபடுவோர்க்கெல்லாம்

சர்வேஸ்வரனாகவும், சர்வேஸ்வர தத்துவமாகவும், பரப் பிரம்மத்துவமாகவும் அனைத்தையும் உணர்த்தி நிற்கின்ற பெருவரத்தை, தந்தருளும் பாக்கியத்தைப் பெற்றார்.

4. இவ்விடத்தில் தான் இன்றைக்கும் ஸ்தல விருட்சமாக ஓங்காரப் பிரணவ மூர்த்தியே கொன்றை மரமாக வீற்றிருக்கின்றார். இந்த மகிமை வாய்ந்த கொன்றை மரம் தான் நாம் கண்ணால் காணக்கூடிய ஓங்காரத்தின் சொரூபமாகும்.

5. இப்படிப்பட்ட ஓங்காரப் பிரணவத்தை நாம் உய்த்து உணரும் பொருட்டுதான், இத்திருப்பத்தூரில் திருத்தலநாதர் சிவாலயத்தில் ஓங்காரமே கொன்றை மர ரூபத்தில் நமக்குக் காட்சி அளிக்கின்றது. ஓங்காரத்தின் ஒளிப் பிரகாசமான சொரூபத்தை காணும் சக்தி நமக்கில்லை. நாம் அதை பெறவில்லை என்றாலும், ஓம்காரம் நம் கண்ணுக்குத் தெரிகின்ற வகையில் ஒரு மரமாக இத்திருத்தலத்தில் அமைந்திருப்பது நாம் செய்த பாக்கியம் தானே!

6. இப்படி மகிமை வாய்ந்த இந்த கொன்றை மர விருட்சத்தை நாம் தரிசித்தால் நிச்சயமாக உறுதியாக நீங்கள் ஒன்றை சொல்லிக் கொள்ளலாம். நான் ஓங்காரத்தை ஓங்கார ரூபத்தை தரிசித்து விட்டேன் என்றும் இதனை ஆழ்ந்து நம்பிக்கையுடன் உணர்வீர்கள் என்றால் நிச்சயம் ஓங்கார தத்துவம் புரியலாகும். மேலும், இந்த அற்புத ஓங்கார கொன்றை விருட்சம் நம் (ஆசிரியர்) ஆஸ்ரமத்திலும் தரிசிக்கலாம். அமர்ந்து தியானிக்கலாம்.

கொன்றை விருட்சத்தை வழிபட மாற்றம் தரும் அற்புதம்

1. வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பாக்கியம் இது என்று எண்ணி இக்கொன்றை மரத்தை வலம் வந்து ஓங்காரத்தை ஆழ்மனதிலும், சப்தமிட்டும் சொல்லிய வாறே அடிப்பிரதட்சினம் செய்து அதன் அடியில் தர்ப்பை பாயில் அமர்ந்து ஓங்காரம் சொல்லிக் கொண்டு தியானம் செய்து வந்தால்,

2. ஓங்காரத்தின் தன்மை இறையருளால் உணர முடியும். ஏனென்றால் ஓங்காரப் பிரணவ மூர்த்தியே. ஓங்காரத்தை உணர்த்துகின்றார் அல்லவா! இந்த மரத்தின் மகிமையை உணர்ந்து கோடானுகோடி தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், மகான்கள், சித்தர்கள் போன்றோர் சூட்சுமமாக வலம் வந்து வழிபட்டும் தியானித்தும் இன்றும் உள்ளார்கள்.

3. குறிப்பாக இதன் பட்டை கீழே கிடைத்தாலும் இதன் பூ கிடைத்தாலும் காய வைத்து உடையாமல் பாதுகாத்து பூசை அறையிலும், பணம், பொன், பொருள் வைக்கு மிடத்திலும், கைப்பை, சட்டைப்பையிலும் வைத்துக் கொண்டால் ஐஸ்வர்யம் கிட்டும். காரிய சித்தியும் கைகூடும்.

இதுபோன்று புண்ணிய விருட்சங்களுக்கு ஒவ்வொன் றிற்கும் சரித்திரம் உண்டு. ஆனால் அனைத்தையும் இப்புத்தகத்தில் தர இயலாததால் மொத்தமாக ஒரு புத்தக தொகுப்பாக கொடுத்தால் நன்று என்பதால் விரைவில் காண்போம்.



புதிய வீடு கட்டி தலை வாசற்படி அமைக்கும் லக்ஷணமும் மகிமையும்

1. இவை மிக முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. நாம் புதிதாக கட்டும் வீட்டிற்கு தலை வாசற்படி வைப்பது மிக மிக முக்கியமாக திகழும் என்பதும், அதன் முக்கியத்துவமும் அனைவரும் அறிந்ததே. இருப்பினும் சாஸ்த்திரம் கூறும்படி வைத்திருக்கிறோமா? என்று இன்னும் பல பேருக்கு தெரியாது. இந்த சாஸ்த்திரம் கூறிய படி அமைந்திருந்தால் அதற்கு என்ன பெயர் என்ன பலன் என்றும், இல்லையென்றால் என்ன பிரச்சனை என்றும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அப்படி சாஸ்த்திரம் கூறியபடி இல்லாமல் வாஸ்த்து பார்த்து புதன், குரு, சுக்ரன் என்ற பகுதியிலும், சூரியன், சந்திரன் என்ற பகுதியிலும் வாசற்படி அமைத்து விட்டோம் என்று இருக்க முடியாது. இந்த சாஸ்த்திரத்தில் எத்தனையோ வாசற்படி வைக்கும் லக்ஷணத்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை தெரிந்து நீங்கள் கடினப்பட்டு கட்டும் வீட்டிற்கு வாஸ்த்துவின் அளவுகளின் படியும் மிக முக்கியமாக இதில் குறிப்பிட்டிருக்கும் சாஸ்த்திர முறைப்படியும் தலை வாசற்படிகளை அமைத்து பயனடைய வேண்டும், என்பதே அடியேன் குறிக்கோளாக கொண்டு நல்லவை எவை, எவை அதற்கு என்ன என்ன பெயர் எப்படி அமைக்க வேண்டும் என்றும், கெட்டதிற்கு என்ன பெயர் அதை எப்படி தவிர்ப்பது என்பதையும் விவரித்துள்ளேன். இதனை பின்பற்றி பயனடையுங்கள். உங்கள் நண்பர்கள்,

உற்றார், உறவுகளுக்கும் இந்த புத்தகத்தைப் பற்றி சொல்லி பயன்படுத்த வையுங்கள் என்பது என் பணிவான கருத்தாகும்.

1. விசுவ தோமுகம்

இந்த விசுவதோமுகம் என்பது பல நல்ல விருத்திகளை தரவல்லது. இவை எப்படி என்றால் நீங்கள் கட்டும் வீட்டிற்கு நான்கு பக்கங்களிலும் வாசற்படி அமைத்தால் அதற்கு விசுவ தோமுகமென்றும் சகல நல்விருத்தி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

குறிப்பு – முன்பக்கம், தலை வாசற்படி முக்கியமாகவும், மீதம் உள்ள மூன்றுபக்கமும், சாதாரண வாசற்படி அமைத்தல் என்று அறிந்திடுக.

2. வியாக்ர பாதம்

இந்த வியாக்ர பாதம் என்பது நற்பலன் இல்லை. அதாவது ஜீவன்கள் துன்பப்படுதல், திருடர்கள் பயமும், மனபயமும் ஏற்படுத்துமாம். இது வீட்டின் கீழ்பகுதியில் வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கங்களில் இருந்தாலும் அமைத்தாலும் இந்த பலன் ஏற்படுமாம். இதுவே வியாக்ர பாதம் எனப்படும்.

3. பாக்கிய பிரதம்

இந்த பாக்கிய பிரதம் என்பது தெற்கு முகமாக வாசற்படி இல்லாமல் மற்ற மூன்று பக்கமும் அமைந்திருந்தால் அவை நற்பலனாம். இதுவே பாக்கிய பிரதமாம். இப்படி அமைந்தால் பாக்கியம் அடைந்து புகழ் கிட்டுமாம்.

குறிப்பு – மாறாக இருந்து இதுபோன்று அமைக்க வசதியுள்ளது என்றால் அமைத்துக் கொள்வது பாக்கியம் தரும்.

4. ஸ்ரீ நிலையம்

இவை அற்புத நல்ல பலன் அளிக்கக்கூடியதாம். இது மேற்கு முகமாக வாசற்படியின்றி மற்ற மூன்று பக்கம் வாசற்படியிருந்தால் அதற்கு ஸ்ரீ நிலையம் என்று பொருளாம். இதனால் நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்து மகிழ்வாய் இருப்பார்களாம்.

குறிப்பு – வாடகை வீடாக இருந்தாலும் இதனை கவனித்து சென்றால் நீங்கள் வீடு கட்டும் பாக்கியம் கிட்டுமாம். சொந்தமாக கட்டுபவர்கள், கட்டியிருப்பவர்கள் முடிந்தால் இந்த அமைப்பை கடைபிடியுங்கள்.

5. சூரிய நிலையம், மற்றும் புண்டரிகம்

இவை மத்திமமான பலன் தருபவை என்பதால் கவனித்து அமைக்க வேண்டும். அதாவது வடக்கு முகமாக வாசற்படி யின்றி மற்ற மூன்று பக்கங்களிலும் இருந்தால் அதற்குப் பெயர் சூரிய நிலையம். இதனால் ஆழ் மனதில் பயமும், எதிரிகள் பயமும் ஏற்படுமாம். அதைபோல இக்கட்டிடத்தில் சுவர்கள் கோணலாக இருந்தாலும் ஒரு பக்கமாக சுவர் இல்லாமல் இருந்தாலும் இதற்கு புண்டரிகம் எனப்படுமாம். இவை இரண்டிற்கும் நல்ல பலனும் இல்லை. கெட்ட பலனுமில்லை. மேற்குறிப்பிட்ட பயங்களை தவிர மத்திம பலனேயாகுமாம்.

குறிப்பு – இந்த வீட்டிற்கு அனுபவம் உள்ளவர்களை வரவைத்து பார்த்து குறிப்பிட்டபடி அமைத்துக் கொள்வது நல்லது.

6. விசால கமலாகரம்

இவை நல்ல பலன் கொடுக்கக் கூடியவை. இது தெற்கு திசையிலும், மேற்கு திசையிலும் கட்டின வீட்டின் பெயராக இந்த விசால கமலாகரம் என்று பெயர் வந்ததாம். இவை

வாசற்படிக்கு அல்ல, வீடு அமையும் திசையாம். இதன் பலன் லக்ஷ்மி கடாட்சமும் புகழ் பெறுவோராகவும் திகழ வைக்குமாம்.

குறிப்பு – தெற்கு, மேற்கு மனைகளின் அமைப்பு சதுரமாகவும், செவ்வகமாகவும் இருத்தல் அவசியம் (விசாலம் என்றால் அகலம், விரிவு) என்று பொருள்.

7. விசால சுவர்ணபலம்

இவை நல்ல பலனை தராதாம். அதாவது மேற்கு முகம், வடக்கு முகம் கட்டின வீட்டின் விசாலத்திற்கு (அகலத்திற்கு) சுவர்ண பலம் என்று பெயராம். இதன் பலன் திருட்டு பயமும், பெரும் துன்பமும் எல்லா பிரச்சனைகளான ருண, ரோக சத்துருக்களால் வேதனை ஏற்படுத்துமாம்.

குறிப்பு – இந்த விசாலம் என்பது அகலம். குறிப்பிட்ட திசையில் அகலம் அதிகமாக அமைந்து மற்ற திசைகள் குறுகியிருந்தால் பிரச்சனை ஏற்படும் என்பது அர்த்தமாம்.

8. விசால யுக்கதமுஷ்டிகம்

இவை நல்ல பலன் தருபவையில்லை. இதன் அமைப்பு என்பது வடக்கு முகமும், கிழக்கு முகமும் விசாலம் அகலமாக மற்ற திசை குறுகி கட்டியிருந்தால் அதற்கு யுக்கத முஷ்டிகம் எனப்படும். இதனால் பல நோய்கள், பயம், மரண பயம், தற்கொலை எண்ணம், திடீர் இழப்புகளால் வேதனைகளையும் தருமாம்.

குறிப்பு – இப்படி அமைந்திருந்தால் இதற்கு தீர்வாக அனுபவமுள்ள பெரியோர்களை ஆலோசனை கேட்டு குறிப்பிட்டபடி தீர்வு பெற்றிடுக.

9. புத்திர முஷ்டிகம்

இதன் பலன் நற்பலனாம். இந்த அமைப்பின் விளக்கம் தெற்கு, மேற்கு, வடக்கு கட்டி, அமையும் வீட்டில், கிழக்கில் வாசற்கால் வைத்தல், அமைதல் என்பது புத்திர முஷ்டிகம் எனப்படும். இதன் நற்பலன் நிறைய நன்மைகள் கிடைப்பது, பிள்ளைகளுக்கு மிகவும் நற்பயன் தருவது, அனைத்து விதத்திலும் பிள்ளைகளால் பெற்றோர்களுக்கு நற்பெயர் புகழ் கிடைக்கச் செய்வது.

குறிப்பு – இந்த அமைப்பில் உள்ளவர்கள் நல்ல குறிக்கோளை பின்பற்றி செயல்படுவதும் பெரியோரின் சொற்படி கீழ்ப்படிந்து பின்பற்றுவது மிகவும் நல்லது.

10. அதிசயம்

இதன் பலனும் நற்பலனே, இதன் அமைப்புகள் வடக்கு, கிழக்கு, தெற்கு கட்டின வீட்டிற்கும் மேற்கில் வாசற்கால் அமைந்தாலும், அமைத்தாலும், இதற்கு அதிசயம் எனப்படும். சகல நன்மையும், சுபயோகமும் கிட்டுமாம். அதை போலவே கிழக்கு, மேற்கு, வடக்கு கட்டின வீட்டிற்கு வடக்கில் வாசற்கால் வைத்தாலும் அமைந்தாலும் நல்ல சுகபோக வாழ்க்கையுண்டாம்.

குறிப்பு – மனை பூஜையும் மனை சுத்தியும் செய்து கட்டுவது இப்பலனை முழுமையாக தருமாம்.

11. கல்யாண பதம்

இதுவும் மிக நற்பலன் தரக்கூடியதாம். இதன் அமைப்பு மேற்கு, கிழக்கு, வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசற்கால் இருந்தால் இதற்கு கல்யாண பதம் எனப்படும். இதன் பலன் சகல ஐஸ்வர்யமும், சகல சம்பத்தும் தருமாம்.

குறிப்பு – இப்படி அமையும் வாசற்படியின் கீழ் சங்கு தவிர நவரத்தினம், பஞ்சலோகம், பாதரசம், வாஸ்து யந்திரம், சுவஸ்த்திக் பதிப்பதும் மிகவும் நல்லது.

12. சதுவச்சாலை

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு இந்த நான்கு பக்கத்திலும் வீடு கட்டியிருந்தால் காலியில்லாமல் முழுமையாக கட்டியிருந்தால் இதற்கு சதுவச்சாலை எனப்படும். இதன் பலன் எல்லா ஐஸ்வர்யமும் சித்தியாவது உத்தமமாம்.

குறிப்பு – இப்படி அமையும் வீட்டிற்கு வாஸ்து அமைப்பு கட்டாயம் அவசியம். சிறந்த ஆலோசகரை அணுகுவது நல்லது.

ஆக, இவ்வளவு விஷயத்தையும் ஒன்றுக்கு பல முறையாக படித்து மனதில் பதிய வைத்து கொண்டு தாங்களும் தங்களை சார்ந்தவர்களும் பின்பற்றி வழிவழியாக நற்பலன் அடைந்து சந்ததி சுமுகமாயும் பயன் அடையவும் பலனடையவும் நினைத்தபடி வீடு கட்டி குடி புகவும், இறையருளும், குருவருளும் கிடைத்திட வாழ்த்துக்களை கூறி வழங்கி மகிழ்கிறேன்.



3

பஞ்சபூதங்களாலும், கிரகங்களாலும் ஏற்படுகின்ற நோய்களும், தவிர்க்க வேண்டியவைகளும்

இந்த பஞ்ச பூதங்களாலும் கிரகங்களாலும் ஏற்படும் நோய்களை அவசியம் நாம் தெரிந்துகொள்வது நல்லது. இதை தெரிந்து கொள்வதால் சில முன்னெச்சரிக்கையாக பெரிய நோய்கள் வராமல் நம்மை பாதுகாத்தும், வாழ்வியல் முறைகளை தவறில்லாமல் கடைப்பிடித்து, நோய்கள் பெரிதும் பாதிக்காமல் பாதுகாத்து திகழும் என்பதை உணர்ந்து படித்து பின்பற்றுங்கள்.

1. மண் தத்துவம் (நிலம்)

1. இந்த மண் நில தத்துவத்தின் கூறுகள் அவை எலும்புகள், தோல், தசைகள், முடி, நரம்புகள் என்பதின் செயல் பாடுகளுக்கு காரணமாக திகழ்கிறது. உடலில் மண் தத்துவம் கூடினாலும், குறைந்தாலும், பாதங்கள் முதல் முழங்கால்கள் வரை வலிமை இழந்து பலம் குறைந்து பாதங்களில் முழங்காலில் நரம்பு பிடிப்பு, நரம்பு சுற்றி கொள்ளுதல், இழுத்து பிடித்தல், கால் மரத்ததை போல உணர்வு ஏற்படுதல்.

2. அதைபோல சுவாசப் பிரச்சனைகள், எலும்புகள் தேய்மானம், தசைபிடிப்பு, வீக்கம், வலி, கண்ணில் நீர்வடிதல், புண்கள், தழும்புகள், அரிப்புகள், தோலில் தேமல், சொறி சிரங்கு போன்று தோல் வியாதிகள், காது அடைப்பு, காது மந்தம், காதில் சீழ் வடிதல் போன்ற பிரச்சனைகள் உண்டாகும். இப்படிப்பட்டவர்களுக்கு உப்பின் சுவை மாறும். இதற்கு காரண கிரகம் புதன் எனப்படும்.

3. ஆகையால் இப்படிப்பட்ட பாதிப்பு உண்டாக்கும் உணவுகளையும், பழக்க வழக்கங்களையும் தவிர்த்து மாற்றிக் கொண்டு முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது. இந்த நோய்கள் வருவதற்கு முக்கிய காரணம் வாதமாம். அதனால் இந்த வாதம் ஏற்படுத்தும் உணவுகளை தவிர்ப்பது நலம்.

2. நீர் தத்துவம்

1. இந்த நீர் தத்துவமானது இரத்தம், கொழுப்புகள், நீர், சிறுநீர், சளி, மூளையை தாங்கும் திரவமாக செயல்படுகின்றன. உடலில் நீர் தத்துவம் கூடினாலும், குறைந்தாலும், முழங்கால், இடுப்பு, விலா பக்கம், வலிமை குறைந்து முழங்காலில் இருந்து இடுப்பு பகுதி வரை, வீக்கம், வலி, சதைபிடிப்பு, நரம்புப் பிடிப்பும் உண்டாக்கும்.

2. அதைபோல் உணவின் சுவை நாவில் மாறுபட்டு தெரியும். மனமோ கட்டுக்குள் இல்லாமல் பயமும், குழப்பமும், அதைபோல இரத்தம் கெடுவதும், கொழுப்பு சத்து கூடுவதும், குறைவதும், சளி ஏற்படுத்துவதும், நீரின் அளவு மிகுதியாகி அதிக வியர்வையும் அதிக சிறுநீர் கழிக்கவும் நேரும்.

3. நாவில் காரத்தன்மை கூடுதல், குறைதலாகவும், மூளையின் பகுதிகளில் சிறுசிறு பிரச்சனைகள் உண்டாக்கும். இதனால் தூக்கமின்மை, வாய்குழறல், கோபம், அதிக தூக்கம், நினைவாற்றல், குறைபாடுகள், வெண் புள்ளிகள் அதிக கொட்டாவியும், தலை சுற்றல் போன்றும் உருவாகும். இதற்கு காரண கிரகம், சுக்ரனும், சந்திரனுமாம்.

4. ஆகையால் உணவில் அதிக கொழுப்பு சத்தும், இனிப்பு சத்தும், குறைத்தும், கண் விழித்தலை தவிர்த்தும், நேரம் தவறி உணவு சாப்பிடுவதை தவிர்த்தும், கட்டுப்பாட்டுடன்

அனைத்து செயலும் செய்தலும், உடற்பயிற்சியும் கட்டாயம் செய்து இந்த நோய்கள் அணுகாமல் பாதுகாத்து கொள்ளவும்.

3. தீ தத்துவம்

1. இந்த தீ தத்துவ நோய்களின் விளக்கங்கள், பயம், அகங்காரம், அதிக உறக்கம், சோம்பேறித்தனம், உடல் திமிர் எடுத்து முறுக்கி கொள்ளுதல், கண்ணெரிச்சல் போன்றும் செயல்படுகின்றன. உடலில் தீ தத்துவம் கூடினாலும், குறைந்தாலும் இடைப்பகுதியும், மார்பு பகுதிகளும் பலம் இழந்து வலிமை குறைந்து வீக்கம், நரம்புப் பிடிப்பு, இரத்தக் குழாய் அடைப்பு, கண் உபாதைகள், காம இச்சை அதிகமாக இருத்தல், சிடு சிடு என கோபப்படும் குணம், பிடிவாத குணம், வெளியில் செல்லும் பொழுது மலம் கழிக்க வருமோ! என்ற பயம் ஏற்படுவது.

2. இந்த தீ தத்துவம் நாவினில் 'புளிப்பின்' சுவை கூடியோ குறைந்தோ இருக்கும். புளித்தயேப்பம், அஜீரணம், மூல நோய், மலத்தில் இரத்தம் வருதல், மூக்கில் இரத்தம் வருதல், மார்பு பகுதியில் உள்ளும் வெளியிலும் பிரச்சனையாக நோயை உண்டாக்கும். இதற்குக் காரணம் சூரியன், செவ்வாய் கிரகமாம். இதனால் தோல் நோயும் ஏற்படும்.

3. இதனைக் கருத்தில் கொண்டு உஷ்ண சம்பந்தப்பட்ட உணவுகளை தவிர்த்து தினமும் சூரிய வெளிச்சத்தில் சிறிது நேரமாவது நின்று சூரிய நமஸ்காரமும் செய்வதும் நல்லது. மதுவகைகளையும், புகை பிடிப்பதை தவிருங்கள். இல்லையென்றால் இருதய இரத்தக் குழாய் அடைப்பு வந்துவிடும், ஜாக்கிரதை. இரவில் கண் விழிப்பதையும் தவிர்க்கவும்.